சுருக்கம்

பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – சிவகங்கை மண்டலம், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 9 பேரூராட்சிகளை மதுரை மண்டலத்துடன் இணைத்து மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ் கொணர்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை

அரசாணை (நிலை) எண். 87

நாள்.30.07.2014
(திருவள்ளுவர் ஆண்டு 2045)
ஜய, ஆடி–14.

பேரூராட்சிகள் இயக்ககம் 12 AUG 2014 சென்னை-600 108

A6 12789 12789 15047/13

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.103, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.10.07.2013.

மீண்டும் படிக்கவும்:

2. பேரூராட்சிக்ளின் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.15047/2013/அ6, நாள்.25.10.2013.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நிர்வாக கட்டுப்பாட்டில் இருந்து வந்த தேனி மண்டலம் தனியாக பிரிக்கப்பட்டு, தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரகம் என்ற புதிய மண்டலம் உருவாக்கப்பட்டு ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதத்தில், மதுரை மண்டலமானது, மதுரை மற்றும் தேனி மாவட்டத்தை உள்ளடக்கியது என்றும், மதுரை மாவட்டத்தில் 9 பேரூராட்சிகள், 74.450 சதுர கி.மீ பரப்பளவை கொண்டு அமைந்துள்ளன என்றும், தேனி மாவட்டத்தில் 22 பேரூராட்சிகள் 201.205 சதுர கி.மீ பரப்பளவு கொண்டு அமைந்துள்ளன என்றும், இவ்விரு மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகள், மதுரை மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் மூலம் நிர்வகிக்கப்பட்டு வந்தது என்றும், அதன்படி தேனி மாவட்டத்தில் உள்ள 22 பேரூராட்சிகளும் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நிர்வாகத்தில் இருந்து பிரிக்கப்பட்டு தற்போது தேனி மண்டல உதவி இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ் செயல்பட்டு வருவதால் மதுரை மண்டலமானது 9 பேரூராட்சிகளை மட்டும் நிர்வகிக்கக் கூடிய சிறிய மண்டலமாக செயல்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர் தொடர்ந்து சிவகங்கை மண்டலமானது சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது எனவும், இவற்றில் சிவகங்கை மாவட்டத்தில் 12 பேரூராட்சிகள் 120.830 சதுர கி.மீ பரப்பளவை கொண்டும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 7 பேரூராட்சிகளில் 71.720 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டும், விருதுநகர் மாவட்டத்தில் 9 பேரூராட்சிகள் 95.740 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டும் அமைந்துள்ளன எனவும் குறிப்பிட்டு, சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் இம்மூன்று மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகளை நிர்வகிக்க ஏறத்தாழ 287 சதுர கி.மீ பரப்பளவில் பயணம் செய்ய வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

4. மேலும், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 9 பேரூராட்சிகளும், மதுரை மாவட்டத்திற்கு மிக அருகாமையில் அமைந்துள்ளன என்றும், இப்பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் அனைத்து நிர்வாக பணிகளுக்கும் மண்டல அலுவலகமான சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம் செல்ல வேண்டுமென்றால் சுமார் 45 கி.மீ தூரம் பயணித்து அதன் பின்னர் மதுரையிலிருந்து சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு மீள 43 கி.மீ தூரமும் ஆக மொத்தம் 88 கி.மீ செல்ல வேண்டிய நிலை உள்ளது எனவும், இதனை தவிர்க்கும் பொருட்டு பொது மக்களின் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி மதுரைக்கு மிக அருகில் உள்ள விருதுநகர் மாவட்டப் பேரூராட்சிகளை மதுரை மண்டலத்துடன் இணைத்து நிர்வகிப்பதே சிறந்ததாக கருதப்படுகிறது என்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் மேலும், தெரிவித்துள்ளார்.

5. மேலும், தமிழ்நாடு பேரூராட்சி செயல் அலுவலர் சங்கம் மற்றும் தமிழ்நாடு பேரூராட்சித் துறை பணியாளர் சங்கம் ஆகிய சங்கங்கள், நிர்வாக நலன் கருதி, சிவகங்கை மண்டலத்திலுள்ள விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகள் மதுரை மண்டலத்துடன் இணைத்திடக் கேட்டு கோரிக்கைகள் வைத்துள்ளன என்றும், இவ்வாறு மதுரை மண்டலத்துடன் விருதுநகர் மாவட்டத்தினை இணைப்பதால் நிர்வாக திறன் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கும் சேவைதரம் மேம்படும் என்றும், இதனால் கூடுதல் பணியிடமோ, நிதிச்சுமையோ ஏற்படாது என்றும் தெரிவித்து, பேரூராட்சி பணியாளர்களின் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி விருதுநகர் மாவட்டம் சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ள 9 பேரூராட்சிகளையும் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் இணைத்து உரிய ஆணை பிறப்பிக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. மேற்காணும் பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று, நிர்வாக நலன் கருதி கூடுதல் பணியிடங்கள் ஏதும் கோரக்கூடாது என்ற நிபந்தனையுடன் மதுரை மாவட்டத்திற்கு மிக அருகில் உள்ளதும் மற்றும் சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் நிர்வாகத்தின் கீழ் உள்ளதுமான விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 9 பேரூராட்சிகளையும் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ் இணைத்து அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

க. பணீந்திர ரெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை – 108.
அனைத்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள், அனைத்து மண்டலங்கள்.
(பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 108 வழியாக)
மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை/ தேனி / விருதுநகர் மாவட்டம்.
மாநில கணக்காயர், சென்னை 18/35
சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்.

<u>நகல்</u>
அமைச்சர் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் தனி செயலாளர், சென்னை – 9.
நிதித்துறை, சென்னை -9
முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல்துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை , சென்னை –9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

30.7.14
பிரிவு அலுவலர்.
30/7/14